*திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.*
*வாரம் ஒரு நீதிக்கதை –* 28.06.2026

## *வாழ்க்கைப் பயணம்..!*

*இளைஞன் ஒருவன், ஞானியிடம் கேட்டான்.. “ மனிதர்களுக்குக் கடவுளின் துணை எதற்கு? கடவுளின் துணை இல்லாமல் மனிதனால் வாழ முடியாதா?” என்று.*

*ஞானி கேட்டார், “ உனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டத் தெரியுமா?*

*“ஓ... பிரமாதமாக ஓட்டுவேன்.” என்று இளைஞன் சொல்ல,*

*“ஹெல்மெட் அணிந்து கொள்வாயா?” என்று கேட்டார் ஞானி.*

*“ஆமாம். அது கட்டாயம் ஆயிற்றே..”*

*"கட்டாயம் இல்லாவிட்டால், அணிய மாட்டாயா?"*

*"இல்லை. அணிவேன். பாதுகாப்புக்கு அது அவசியம்”*

*" காரில் போகும்போது, ஏன் சீட் பெல்ட் அணிந்து கொள்கிறோம்?"*

*"அதுவும் பாதுகாப்புக்காகத்தான். விபத்து நடந்தால் ஹெல்மெட், சீட் பெல்ட் அணிந்தவர்களுக்கு உயிர் பிழைக்கும் வாய்ப்பு அதிகம் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறதே" என்று சொன்ன இளைஞனைப் பார்த்து , ஞானி சொன்னார்..*

*"மோட்டார் சைக்கிளில் போனால் ஹெல்மெட், காரில் போனால் சீட் பெல்ட், விமானத்திலும் சீட் பெல்ட், ஆக்ஸிஜன் மாஸ்க், பாரசூட் போன்ற பாதுகாப்பு சாதனங்கள், கப்பலில் போனால் லைஃப் போட். லைஃப் ஜாக்கெட் போன்ற சாதனங்கள்.. என்று வாழ்க்கையில் நாம் போகும் எல்லாப் பயணங்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்கிறோமே.. வாழ்க்கை என்ற இந்த நீண்ட பயணத்திற்கு என்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்கிறோம்?"*

*இளைஞன் பதில் சொல்லாமல், ஞானியின் விளக்கத்திற்காகக் காத்திருந்தான்.*

*" இந்த உலக வாழ்க்கை என்பது. ஒரு கடலில் நீந்துவது போலத்தான். இந்தப் பிறவியை நாம் கடந்து போவது என்பது.. ஒரு பெருங்கடலை நீந்திக் கடப்பது போலத்தான். இந்தக் கடலை நாம் நீந்திக் கடப்பதுதான் வாழ்க்கை. இந்த நீண்ட அபாயம் நிறைந்த பயணத்தில் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள, நாம் நாட வேண்டியது இறைவனின் பாதுகாப்பைத்தான். இறைவனின் திருவடிகளைப் பற்றியவர்களுக்கு, இந்தப் பிறவிக் கடலை நீந்திச் செல்வது எளிதாக இருக்கும்.*

*திருக்குறள் - அதிகாரம்: 1 - கடவுள் வாழ்த்து*

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்.*
(*குறள்* – 10)